Dr. S. RAJAVELU, M.A., M.A., M.Phil
Asst. Epigraphist
O/O The Dy. Superintending Epigraphist
Archaeological Survey of India
Fort. St. George
Chennai - 600 009

O-25675783 R-26373028 Ph.: 5665763
email- rajavel_arasi@yahoo.com



# தமிழக வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் பழைய சீவரம்

13.4.07

*சு.இராஜவேல்*

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டத்தில் இன்று சிற்றூராய்க் காட்சி அளிக்கும் பழைய சீவரம் தமிழகத்தை ஆண்ட பேரரசுகளான பல்லவர் மற்றும் சோழர்கள் காலத்தில் மிகச் சிறந்த ஊராட்சி முறையைக் கொண்டு விளங்கிய பேரூராக விளங்கி இருந்தமையை அழிந்த நிலையில் இருந்து ஆன்மீகப் பெரியோர்களால் தற்பொழுது புதியதாக கண்டுபிடிக்கப்பட்டு புணரமைப்பு பணி நடைபெற்று வரும் வைகுந்தப் பெருமாள் கோவிலின் அதிட்டானக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது. இப்புணரமைப்புப் பணி வைகுந்தப் பெருமாள் கோவில் புணரமைப்பு அமைப்பாளர்களான அருளாளர்கள் திருமிகு வெங்கடாச்சாரி மற்றும் திருமிகு.இராமசாமி ஆகியோர் தலைமையில் சீரும் சிறப்பும் பெற்று நடைபெற்று வருகின்றது.

இயற்கை எழில் கொஞ்சும் மலைவளம் பாலாறு, வேகவதி மற்றும் செய்யாறு சங்கமிக்கும் முக்கூடலின் வட கரையில் இன்று சிற்றூராய்க் காட்சி அளிக்கும் பழைய சிவரம் சோழர் காலத்தில் சீயபுரம் எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுள்ளது. இவ்வூரில் உள்ள பிறிதொரு கோயிலான இலக்குமி நரசிம்ம பெருமாள் கல்வெட்டுகளில் இவ்வூர் சியபுரம் எனக் குறிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட வைகுந்த பெருமாள் கோவில் ஊரின் நடுவில் அமைந்துள்ளதால் முற்காலத்தில் இக்கோயிலே இவ்வூரின் மூல தெய்வமாக விளங்கி இருத்தல் வேண்டும். மேலும் இலக்குமி நரசிம்மர் கோவிலை விட காலத்தால் முற்பட்ட கோவிலாக வைகுந்த பெருமாள் விளங்குகிறது. இதனை புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. மண்ணுக்கடியில் புதைந்து இருந்த வைகுந்த பெருமாள் கோவிலின் அதிட்டானப் பகுதிகளை வெளிக்கொணர்ந்த பொழுது தொண்டை மண்டலத்தில் பத்தாம் நூற்றாண்டிலே தனி ஆட்சி புரிந்த பார்த்திவேந்திராதிபதி என்னும் அரசனின் கல்வெட்டுகளும் சோழர் ஆட்சியை நிலைநிறுத்திய முதலாம் பராந்தகனின் கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வூரில் உள்ள இலக்குமி நரசிம்மர் கோவிலின் கல்வெட்டுக்கள் மூலம் இவ்வூர் இரு பகுதிகளாக விளங்கி இருந்தமையை அறியமுடிகிறது. வைகுந்த பெருமாள் இருந்த பகுதி விண்ணபுரம் என்றும் இலக்குமி நரசிம்ம பெருமாள் இருந்த பகுதி சீயபுரம் என்றும் அழைக்கப்பட்டது. இலக்குமி நரசிம்மர் கோவில் கல்வெட்டுகளில் இறைவன் சிங்கபிரான் என்றும் கோவில் இராஜேந்திர சோழ

Scanned with CamScanner

விண்ணகரம் என்றும் குறிக்கப்படுகின்றது. பிற்கால சோழர் காலத்தில் சீயபுரப் பகுதி திருமாலிருஞ்சோலை எனவும் அழைக்கப்பட்டது. சீயபுரம் அந்தனர்கள் வசிக்கும் சதுர்வேதிமங்கலமாக விளங்கி வந்துள்ளது. எனவே இவ்வூர் சீயபுரம் என்கின்ற திரிபுவன வீர சதுர்வேதிமங்கலம் எனவும் அழைக்கப்பட்டது. சீயபுரம் சோழர் காலத்தில் நீர்வேலூர் நாட்டில் ஊற்றுக்காட்டுக் கோட்டத்தில் அமைந்திருந்தது.

கி.பி. 17ஆம் நூற்றாண்டளவில் சீயபுரம் உத்தங்க சோழ சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரிலும் 'ஜீயர்புரம்' என்றும் அழைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இலக்குமி நரசிம்மர் கோவிலை 'சங்கர–பரிகுஜீவரு' என்பவர் புணரமைத்துள்ளார். இதன் மூலம் இவ்வூர் 'ஜீயர்களுடன்' பெரிதும் தொடர்பு கொண்டிருந்தமையை அறியமுடிகிறது. மேற்குறித்த சங்கர–பரிகுஜீவரின் வழி வந்த சங்கர பரிகுஜீ–மிடாஜீ (**Sankara parikuji-Mitaji**) என்பவர் இவ்வூரின் மலை மீது அமந்துள்ள கோயிலை புனரமைத்துள்ளார். இம் மலை 'பத்மகிரி' என அழைக்கப்பட்டது. மேலும் மலை மீது இருக்கும் கோயிலுக்கு பூஜைகள் நடக்க தானங்கள் இக்காலகட்டத்தில் கொடுக்கப்பட்டன.

புதியதாக ஊரின் மையதில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருமாள் கல்வெட்டுகளில் விண்ணபுர ஆழ்வார் எனக் குறிக்கப்படுகிறார். இக் கோயிலின் கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதி சீயபுரத்தின் மையப் பகுதியாக விளங்கி வந்துள்ளது. இது விண்ணபுரம் எனக் குறிக்கப்பட்டது. இவ்வூரை ஊர் பொது சபையாகிய பெருங்குறி சபையார் ஆட்ச்சிபுரிந்து வந்தனர். கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தழைத்தோங்கிய ஊராட்சி மன்றம் இவ்வூரில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வந்துள்ளமையை விண்ணபுர கோயிலில் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கலிவெட்டுக்களின் மூலம் அறியப்படுகிறது. விண்ணபுரத்தின் பெருங்குறி சபையார் ஊரின் நடுவில் அமைந்த வீரர்க் குயிலம் பத்திலே கூடுகின்றனர். பார்திவேந்திராதிபதிவர்மனின் 4 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு இதனை(9ஆம் நூற்றாண்டு)க் குறிப்பிடுகிறது. ஊர் வாரியம் செய்கின்ற பெருமக்கள் ஊர் வாரியத் தேர்தலுக்கு நிற்பதற்கு முன் தங்கள் சொத்துக் கணக்கை காட்டவேண்டும் என்றும் சத்தியம் செய்து ஊர் வாரியப் பெருமக்களாக பணி ஏற்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது. இவ்வூரில் ஏரிவாரியம், *சம்வத்சர* (ஆண்டு வாரியம்) வாரியம் ஆகிய வாரியங்கள் இருந்துள்ளன. இதேபோன்று இம் மன்னனின் பிறிதொரு கல்வெட்டு வாரியம் செய்கின்ற பெருமக்கள் மீண்டும் வாரியத்தில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தடை விதித்திருந்ததுடன் ஆண்டுதோறும் வாரியப் பெருமக்கள் தங்களின் சொத்துக் கணக்கை காட்டி சத்தியம் செய்து வாரியம் புக வேண்டும் என உத்தரவு இட்டது. இத்துடன் ஊர் கணக்கு எழுதுவோர் கணக்கு எழுதும் பொழுதும் விடும் போதும் சத்தியம் செய்து கணக்கு எழுதுதல் வேண்டும் என்றும் குறிக்கப்பட்டது. இதனை ஒவ்வொரு ஆண்டும் வாரியம் செய்வோர் கடைபிடித்தல் வேண்டும் என ஆணை இடப்பட்டது. இதேபோன்று சோழப் பேரரசன் முதலாம் பராந்த

Scanned with CamScanner

சோழனின் 15வது ஆட்சி ஆண்டில் (கி.பி. 922) விண்ணப்புரத்து பெருங்குறி சபையார் இவ்வூரின் சீர்குட்டி அம்பலத்திலே கூடி அவ்வாண்டு முதல் வாரியஞ்செய்கின்றவர் குடும்பின் மூலமாகவும் சபை மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் அவ்வாறு வாரியப்பணியை ஏற்க வேண்டும் என்றும் அதற்காக இரண்டு கழஞ்சு பொன் ஊதியமாக இவர்கள் பெறுவர் என்றும் குறிக்கின்றது. பிற சலுகைகள் மற்றும் தனி ஊதியம் பெறுதல் கூடாது என்றும் ஒவ்வொரு ஆண்டும் ஊர் சபைக்கு வாரியப் பெருமக்கள் கணக்கு காட்டுதல் வேண்டும் என்றும் வாரியப் பணியை செய்யாது இருத்தல் கூடாது என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இக்கல்வெட்டின் மூலம் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் இவ்வூரில் மிகச் சிறந்த ஊராட்சி முறை வழக்கில் இருந்தமையை அறியமுடிகிறது. மேலும் உத்தரமேரூர் ஊரவைக்கும் வாரியத்திற்கும் நிகரான ஊராட்சிமுறை இவ்வூரிலும் நிலவி ஊரை பரிபாலித்து வந்துள்ளது என்பதையும் ஊர் வாரியத்தில் இடம் பெற்ற பெருங்குறி பெருமக்கள் ஊர் சபையின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கியதுடன் ஊர்ச்சபையின் கட்டளைக்கு அடிபணிந்து சொத்துக் கணக்குக் காட்டி சத்தியம் செய்து வாரியப் பணி ஆற்றினர் என்பதயும் அறிய முடிகிறது. தமிழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த சான்றுகளை புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைகுந்த பெருமாள் கோயிலில் அதிட்டானப் பகுதி தாங்கி உள்ளமை தமிழகத்திற்கு பெருமை சேர்பதாக அமைந்துள்ளது. உத்தரமேரூர் வைகுந்த பெருமாள் கோவில் போன்று பழைய சீவரம் வைகுந்த பெருமாள் கோவிலும் தமிழக வரலாற்றுக்கு பெருமை சேர்க்கும் கல்வெட்டுகளை தன்னகத்தே கொண்டுள்ளது எனக் கூறினால் அது மிகையன்று.

Scanned with CamScanner

# ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள் திருக்கோயில்



ஸ்ரீதேவி பூதேவி ஸஹித ஸ்ரீ வைகுண்டநாத பெருமாள்

## ஸ்ரீ வைகுண்டநாத பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண, பிற சிலா மூர்த்திகள், உற்சவ மூர்த்திகள் நூதன ஸன்னிதிகள், நூதன துவஜஸ்தம்ப, ராஜகோபுர அஷ்டபந்தன மஹாபிரதிஷ்டை மஹா ஸம்ப்ரோக்ஷண ஆஹ்வானப் பத்திரிகை

## 28-06-2007


**SRI VAIKUNTANATHA PERUMAL BAKTHA JANA SABHA**

(Regd. Society No.13/2003, Regd. U/S 12AA of I.T. Act)

No 143, Agraharam, Pazhayaseevaram Village & Post, Kancheepuram District, Tamil Nadu - 631 606, India. Ph : 22474518 / 67275829 / 27426192


Scanned with CamScanner

## சட்டமன்ற உறுப்பினர்கள் சொத்துக் கணக்குக் காட்டுவது

இப்போது சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் சொத்துக் கணக்கு காட்டுகிறார்கள்! ஆனால், இந்த வழக்கம் ஆயிரம் ஆண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருந்தது!

அதாவது, ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்டவர்கள்.

**வாரியம்**

சோழர் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்கள் சிறப்பாகச் வெளியிட வேண்டும்.

இவர்களுக்கு சன்மானமாக ஆண்டுக்கு 2 கழஞ்சு (10 கிராம்) பொன் கொடுக்கப்பட்டது.

ஒரு முறை உறுப்பினராக இருந்தவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடக்கூடாது.

**தேர்தல் முறை.**

தேர்தல் எப்படி நடந்தது என்பதை இன்னொரு கல்வெட்டு

# ஆயிரம் ஆண்டுக்கு முன்பே தமிழ் நாட்டில் இருந்த வழக்கம்!

ஆயிரம் ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்கள் இருந்தன. உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களை மக்கள் தேர்ந்து எடுத்தார்கள். இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் தங்களின் சொத்துக்கணக்குகளை பகிரங்கமாக அறிவித்தார்கள்.


சமீபத்தில் கிடைத்த ஒரு தமிழ் கல்வெட்டிலிருந்து இது தெரியவந்திருக்கிறது!

**கல்வெட்டு!**

புதிய தமிழ்க் கல்வெட்டு ஒன்றை சமீபத்தில் நிபுணர்கள் கண்டுபிடித்தார்கள்.

பழைய சிவாரம் கோவிலில் இந்தக் கல்வெட்டு கிடைத்தது.

செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் பழைய சிவாரம் இருக்கிறது. அங்குள்ள பெருமாள் கோவிலில் சமீபத்தில் திருப்பணி நடந்தது. அப்போது மண்ணுக்கு அடியில் புதைந்திருந்த 5 தமிழ்க் கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தார்கள்.



ஆயிரம், ஆண்டுக்கு முந்தைய கல்வெட்டு. தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் தங்கள் சொத்துக்கணக்கைக் காட்டவேண்டும் என்று இந்தக் கல்வெட்டு கூறுகிறது!

**ஆயிரம் ஆண்டு ...**

ஐந்து கல்வெட்டுகளுமே ஆயிரம் ஆண்டு பழமையானவை.

3 கல்வெட்டுகள் பராந்தக சோழன் காலத்தவை. மற்ற இரண்டும் பரிதிவர்மன் காலத்தவை. இவர்கள் இருவருமே 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அரசர்கள்.

செயல்பட்டன. இந்த உள்ளாட்சி மன்றங்கள் பற்றிய விவரங்கள் கல்வெட்டில் உள்ளன.

உள்ளாட்சி மன்றங்களுக்கு "வாரியம்" என்று பெயர் வழங்கியது.

வாரிய உறுப்பினர்களை மக்கள் தேர்ந்து எடுத்தார்கள்.

தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் "வாரியப் பெருமக்கள்" என்று அழைக்கப்பட்டார்கள்.

**சொத்துக்கணக்கு**

வாரியப் பெருமக்கள் தங்களின் சொத்துக்கணக்கை பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

இவர்களின் பதவிகாலம், இரண்டு ஆண்டு.

ஒவ்வோர் ஆண்டும் தங்களின் சொத்துக்கணக்கை தெரிவிக்கிறது.

காஞ்சிபுரத்தை அடுத்த உத்திரமேரூர் கோவிலில் கிடைத்த கல்வெட்டு, இது. இதுவும் ஆயிரம் ஆண்டு பழமையானது. சில ஆண்டுக்கு முன் கிடைத்தது. அந்தக் கல்வெட்டு சொல்லும் விவரங்கள்—

"குட ஓலை" முறையில் வாரிய உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

பனை ஓலை வாக்குச் சீட்டாகப் பயன்பட்டது.

ஒரு மண் குடம், வாக்குப் பெட்டியாக வைக்கப்பட்டது.

வாக்காளர்கள் தாங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயரை ஓலையில் எழுதி, குடத்துள் போடவேண்டும். இதனால் இது "குட ஓலை" என்று அழைக்கப்பட்டது. ★



Scanned with CamScanner

பழயசீவரம்



தினமலர்

# தேர்தலில் நின்றால் காட்ட வேண்டும் சொத்துக் கணக்கு...!
# ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சோழர்கள் போட்ட சட்டம்!

காஞ்சி மாவட்டம் செங்கல் பட்டை அடுத்த பழையசீவரத்தில் ஒரு பழமையான கோயில் கண்டு கொள்ளப் பட்டு, புனரமைக்கப்பட்டு வருகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழர்களால் கட்டப் பெற்றதாக கூறப்படும் இக்கோயில் திருச்சுவர்களில் பண்டைய தமிழர்களின் பல்வேறு கலாசாரங்களையும், பராம்பரியங்களையும் பறை சாற்றும் கருத்துக்கள் காணப் படுகின்றன.

செங்கல்பட்டில் இருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் உள்ளது பழையசீவரம். பாலாற்றங்கரையில், ஒரு சிறு குன்றை ஒட்டி அமைந்திருக்கும் அழகிய கிராமம். குன்றின் மீது ''அஹோபில வல்லி நாயிகா ஸமேத ஸ்ரீ லட்சுமி நரசிம்மப் பெருமாள்'' கோயில் உள்ளது. அக்ரஹாரத்தின் மேற்கோடியில் மிகவும் சிதிலமான நிலையில் ஒரு மஹா விஷ்ணு கோயில் உள்ளது. பல ஆண்டுகளாக யாராலும் கண்டு கொள்ளப் படாத இக்கோயில் மிகவும் புராதனமானது. முற்றிலும் கற்களினால் ஆன கர்ப்ப கிரஹம், அர்த்த மண்டபம், பெரிய கல் தூண்களுடன் மகா மண்டபம் என சர்வ லட்சணங்களுடன் காணப்படும் இக்கோயில் பல ஆண்டுகளாக புதருக்குள் மறைந்திருந்தது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் இக்கோயிலை பார்வையிட்டு, இக்கோயில் சீரமைக் கப்படும் பணியையும், பொருளுதவி யும் செய்து துவக்கி வைத்தார்.



செங்கல்பட்டை அடுத்த பழைய சீவரத்தில் புதருக்குள் சிக்கியிருந்த வரலாற்று பெருமை கொண்ட இக்கோயில், இப்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

இக்கோயில் 9ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது. சிதிலமான இத்திருக்கோயில் இடிபாடுகளில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கர்ப்பக் கிரஹ இடிபாடுகளில் இருந்து மொத்தம் 18 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்கள் உத்திரமேரூர் கல்வெட்டுக் களை ஒத்துள்ளன என்று கூறப்படுகிறது. இங்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் இருந்து அரிய செய்திகள் இதோ:

லட்சுமி நரசிம்மர் கோயில் கல்வெட்டுக்களில் இறைவன் சிங்கபிரான் என்றும், கோயில் ராஜேந்திர சோழ விண்ணகரம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. பிற்கால சோழர் காலத்தில் சீயபுரம் பகுதி திருமாலிருஞ்சோதலை எனவும் அழைக்கப்பட்டது. சீயபுரம் அந்தணர்கள் வசிக்கும் சதுர்வேதி மங்கலமாக விளங்கி வந்துள்ளது. எனவே, இவ்வூர் சீயபுரம் என்கிற திரிபுவன வீர சதுர்வேதிமங்கலம் எனவும் அழைக்கப்பட்டது. சோழர் காலத்தில், சீயபுரம் நீர்வேலூர் நாட்டில், ஊற்றுக்காட்டு கோட்டத்தில் அமைந்திருந்தது.

கி.பி.17ம் நூற்றாண்டளவில், சீயபுரம் உத்தங்க சோழ சதுர்வேதிமங்கலம் என்னும் பெயரிலும், 'ஜீயர்புரம்' என்றும் அழைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இத்திருக் கோயிலை 'சங்கர-பரிகுஜீவரு' என்பவர் புனரமைத்துள்ளார். இதன் மூலம் இவ்வூர் 'ஜீயர்களுடன்' நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. புதியதாக ஊரின் மையத்தில் அகழ்ந்தெடுக்கப் பட்ட பெருமான் கோயில் கல்வெட்டுக்களில் பெருமான் விண்ணபுர ஆழ்வார் என குறிக்கப்படுகிறார். இவ்வூரை ஊர் பொதுச் சபையாகிய பெருங்குறி சபையார் ஆட்சி புரிந்து வந்தனர் என்பது கல்வெட்டுக்கள் மூலம் தெரிகிறது. கி.பி. 9ம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தலைத்தோங்கிய ஊராட்சி மன்றம் இவ்வூரில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வந்துள்ளது. ஊர் வாரியம் செய்கின்ற பெருமக்கள், ஊர் வாரியத் தேர்தலுக்கு நிற்பதற்கு முன்னர் தங்கள் சொத்துக் கணக்கை காட்ட வேண்டும் என்றும், சத்தியம் செய்து ஊர் வாரிய பெருமக்களாக பணி ஏற்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏரி வாரியம், சம் வத்சர (ஆண்டு வாரியம்) வாரியம் என இரண்டு வாரியங்கள் இவ்வூரில் இருந்துள்ளதை கல்வெட்டுக்கள் சுட்டிக்காட்டுகின்றன. மற்றொரு கல்வெட்டில், வாரியத்தில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகிற பெருமக்கள் தங்கள் சொத்துக் கணக்கை பிரிதொரு முறை காட்டி, சத்தியம் செய்ய வேண்டும் என்ற உத்தரவை காட்டுகிறது. ஊர் கணக்கு எழுதுவோர், கணக்கு எழுதும் பொழுதும், விடும் பொழுதும் சத்தியம் செய்து கணக்கு எழுதுதல் வேண்டும் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை ஒவ்வொரு ஆண்டும் வாரியம் செய்வோர் கடைப்பிடித்தல் வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. சோழப் பேரரசன் முதலாம் பராந்த சோழனின் 15வது ஆட்சி ஆண்டில் (கி.பி.922) விண்ணபுரத்து பெருங்குறி சபையார் இவ்வூரின் சீர்குட்டி அம்பலத்திலே கூடி, அவ்வாண்டு முதல் வாரியஞ் செய்கின்றவர் குடும்பத்தின் மூலமாகவும், சபை மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் அதற்கு இரண்டு கழஞ்சு பொன் ஊதியமாக பெறுவார் என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற சலுகைகள் மற்றும் தனி ஊதியம் பெறுதல் கூடாது என்றும், ஒவ்வொரு ஆண்டும் ஊர் சபைக்கு வாரியப் பெருமக்கள் கணக்கு காட்டுதல் வேண்டும் என்றும் வாரியப் பணியைச் செய்யாது இருத்தல் கூடாது என்றும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

Scanned with CamScanner

# Declaration of assets dates back to the Cholas

By T.S. Subramanian

CHENNAI, JAN. 15. A few weeks from now, candidates contesting the Bihar, Haryana and Jharkhand Assembly elections will submit a list of their assets. Newspapers will carry interesting information on the assets they have disclosed — bungalows, cars, jewellery and land — or whether they are modest in their means.

But this disclosure of assets is not just a feature of modern day elections. The newly-discovered Tamil inscriptions of Parantaka Chola and Parthivendrathipathi Varman, dating back to the 10th century A.D., in a village called Pazhaiya Seevaram, show that those elected to the local assembly (called *variyam* in the inscriptions) had to take the oath of office and disclose their assets every year to the assembly. Besides, the accountant of the local assembly had to give a list of his assets to the assembly.

The local assembly, or *variya perumakkal*, met in the centre of the village, called *sirkooti ambalam*, and functioned for a two-year term.



**These inscriptions in Tamil of Parantaka Chola I and Parthivendrathipathi Varman found at Pazhaiya Seevaram village in Tamil Nadu provide information on how the local assembly members had to submit a list of their assets every year.** — Photo: S. Thanthoni

## Temple renovation

These Tamil inscriptions were discovered on the base wall (*adhistana*) of the Sri Vaikunthanatha Perumal temple at Pazhaiya Seevaram in Kancheepuram, on the Chengalpattu-Kancheepuram highway in Tamil Nadu. Pazhaiya Seevaram is a small village on the northern banks of the confluence of the Palar, Vegavathi and Cheyyar rivers.

Of the five inscriptions, three belong to Parantaka Chola-I, and two to Parthivendrathipathi Varman. The latter was, perhaps, an independent ruler of Tondamandalam in the second half of the 10th century after Parantaka Chola-I.

The residents of Palaya Seevaram, led by S.A. Venkatachari and S. Ramaswamy, were renovating the Vaikunthanatha Perumal temple, when they discovered the inscriptions. They informed the Superintending Archaeologist of the Archaeological Survey of India (ASI), Chennai Circle, about their find.

## Self-government

During the early Chola period, Pazhaiya Seevaram was an important centre for Saivism and Vaishnavism. It had two sectors — Sivapuram and Vinnapuram. According to S. Rajavelu, Epigraphist, ASI, the newly-discovered inscriptions refer to the village as Vinnapuram, after Vishnu.

They mention *variyams* such as *samvatchara variyam* (yearly management) and *eri variyam* (management of lake). The assembly accountant had to reveal his assets both when he took charge and left office. Once they completed a term, the assembly members were barred from holding office. All this information is contained in the inscriptions belonging to the fourth regnal year of Parthivendrathipathi Varman.


This system of local self-government in the villages is an important feature of the 10th century Chola administration. Uttiramerur, about 25 km. from Kancheepuram, is famous for the inscriptions found there about its self-government, the election system based on ballots, qualifications for candidates and the subsequent relaxation of qualifications. The inscriptions at Uttiremerur of Parantaka Chola I (907-955 A.D.) were dated 917 A.D. and 921 A.D.

According to Dr. Rajavelu, the inscriptions belonging to the 15th regnal year of Parantaka Chola-I (922 A.D.) reveal that the assembly waselected through wards (*kudumpu*) of the village and through the Brahminical assembly (*sabha*). The members of the *variyam* received an annual payment of two *kalanju* of gold for their work as *variya perumakkal*. They were not to receive any other payments or concessions. They had to perform their *variyam work* and list their assets every year.The inscriptions at both Uttiramerur and Pazhaiya Seevram showed that there was an excellent system of self-government at the village level in Tamil Nadu in the 10th century A.D., the epigraphist said.

Scanned with CamScanner

- ஸ்ரீ ஏ.பி.என். சுவாமி





# தேர்தலில் நிற்பவர்கள் தேடிவந்து தொழும் வைகுந்தப் பெருமாள்

## தேடித் தொழுத திருத்தலங்கள்!

அரசியல் சதுரங்கத்தில் தாங்கள் ஜயிக்க வேண்டுமென்றும், பதவியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஆசைப்படாத அரசியல்வாதிகள் எவராவது உண்டா? இதுவரை வேண்டின வரமளிக்கும் விஷ்ணு கோவில்களைத்தான் சேவித்து வந்தோம். இஃதென்ன அரசியல் சாயம் தெரிகிறதே என நினைக்கலாம். உண்மைதான். அரசியல்வாதிகள்கூட மற்றவர் அறிந்தும் அறியாமலும் தங்களின் ஆன்மிக பக்தியை வெளியிடுவார்களே, அது எந்த சமயம்? என்பது நாம் எல்லோரும் அறிந்ததுதானே!

பதவிக்காக வாக்கு சேகரிக்கும்போது தேசியமும், தெய்வீகமும் இரண்டு கண்கள் என்பர். முழுவதுமாக அரசியல் கட்டுரையொன்றை ஆன்மிகம் எனும் பேரில் எழுதிவிட்டதாக நினைக்கவேண்டாம். அடுத்து சொல்லப்







Scanned with CamScanner



போகும் செய்தி உங்கள் அனைவர்க்கும் ஆச்சரியம் மட்டுமன்றி அத்புதமானதொரு ஆனந்தத்தையும் விளைவிக்கும். அந்த ஆச்சர்யத்தையும், ஆனந்தத்தையும் நேரில் அனுபவித்திட, வைகுந்த வாசனை சேவிக்கலாம், வாருங்கள்.

நாம் முன்னமே நன்கறிந்த ஊர்தான் இது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் இடையே மூன்று நதிகள் சங்கமிக்கும் திருமுக்கூடல் அருகே அமைந்துள்ள பழைய சீவரம் எனும் ஜீயர்புரத்திற்குத்தான் செல்லவேண்டும். த்வீபபுரி எனும் அரும்புலியூர் மற்றும் பழையசீவர க்ஷேத்ர மாகாத்மியத்தில் பாலாறு, செய்யாறு, வேகவதி எனும் மூன்று நதிகள் சங்கமிக்கும் இப்புண்ணிய பூமியைக் குறித்து நன்கறியலாம்.

சுதர்சனகிரி, பத்மகிரி எனப் பல பெயர்கள் கொண்ட அழகிய குன்றின் மீது ஆலயத்தில் அமைந்துறையும் அஹோபிலேசன், அஹோபிலவல்லியை (நரசிம்மரையும், தாயாரையும்) பலமுறை சேவித்திருப்போம்.



வருடந்தோறும் காஞ்சி வரதர் தைப்பொங்கலின் மறுநாள் பழையசீவரம் பாரிவேட்டைக்கு இங்கு எழுந்தருளுவது உலகப் ப்ரசிதமாயிற்றே! இப்படியெல்லாம் பல விஷயங்கள் நாமறிந்திருந்தும், நாம் அறியாத ஓர் அபூர்வம் இவ்வூரின் உள்ளே, நடுநாயகமாக அமைந்திருக்கிறது. கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும் சீயபுரம் என்றே வழங்கப்படும் இஃதொரு அழகிய சிற்றூர். அழகிய ஆற்றங்கரை க்ராமம். நல்ல செழிப்பான பூமி. லட்சுமி நரசிம்மப் பெருமாள் அருள்பெற்ற தலம்.

இக்ராமத்தின் நடுவே அமைந்துள்ளது வைகுண்டநாதப் பெருமாள் கோவில். மக்களின் பார்வையில் அதிகமாகத் தென்படாத திருக்கோயில். ஒரு காலத்தில் முழுதும் பாழடைந்து, முட்புதர்கள் மண்டி, இடிந்து கிடந்தது. இன்று புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது. 2019 செப்டம்பர் 8ம் தேதியன்று மீண்டுமொருமுறை கும்பாபிஷேகத்திற்குத் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறது.

சுவாமி தேசிகன் போன்ற மகான்கள், காஞ்சி வரதன் அழகில் ஈடுபட்டு, வைகுந்த வாசமும் வேண்டாம் என்றனர். இங்குள்ள வைகுந்தநாதப் பெருமாளின் அழகை சேவிக்கும்போது தேசிகன் முதலானோர் அவ்விதம் கூறியதில் ஆச்சர்யம் ஏதுமில்லை எனலாம். அவ்வளவு அழகு! கோவில் பல ஆண்டுகளாகப் பாழடைந்திருந்தபோதிலும் இப்பெருமானின் திருமேனிக்கு எந்த சேதமும் நேரிடவில்லை. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு





முன்பு குடமுழுக்குத் திருப்பணி செய்தபோதே இப்பெருமானின் தெய்வீக சக்தியை உணர்ந்த பலர் உள்ளனர்.

அழகிய முன்மண்டபத்தில் வருடந்தோறும் ஒரு நாள், வரதராஜனும், நரசிம்மனும் பல்லக்கில் எழுந்தருளி சேவை தருகின்றனர். திருமுக்கூடலில் ஒரே மண்டபத்தில் மூன்று பெருமான்களையும் ஒன்று சேர சேவிக்கும் பாக்கியம் நமக்குண்டு.

சிறிய கோவில்தான் என்றாலும், இங்குள்ள செய்திகள் பலவும் நமக்கு ப்ரமிப்பைத் தருகின்றன. சோழர், பல்லவர் கால நாகரிகம், அரசியல், இலக்கியம், அரிய, பெரிய செய்திகள் தொல்லியல் துறையே வியக்கும் வண்ணம் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கிறது. அதிலொன்றுதான் க்ராம, நகர சபைத் தலைவராகத் தேர்தலில் நிற்பவர் தங்களது சொத்துக் கணக்குகளைத் தெரிவிக்கவேண்டும் என்பது!

கேட்கும்போதே நமக்கு ஆச்சர்யம் உண்டாகிறது அல்லவா? வேட்பாளர் சரியான வகையில் சொத்துகளைத் தாக்கல் செய்தால்தான் அவருக்குப் பதவி. இங்குள்ள கல்வெட்டு ஆதாரங்களைக் கொண்டே மேலும் பல தகவல்களை ஆராயலாம் வாருங்கள்.



10-ம் நூற்றாண்டைச் சேர்ந்த புராதனமான இத்திருக்கோயில், புதர்களுக்கிடையே மறைந்து கிடந்தது. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மீண்டும் கண்டெடுக்கப்பட்டு, இவ்வூரைச் சேர்ந்த ஆன்மிகப் பெரியோர்களின் தலைமையில், வைகுண்டநாதப் பெருமாள் பக்த ஜன சபா நிறுவப்பட்டு, புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (சமீபத்தில் மறைந்த) ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன் சுவாமிகளின் பரிபூரண அருளாசியுடன், 12 வருடங்களுக்கு முன்பு, இத்திருக்கோயில் சம்ப்ரோக்ஷணம் நடந்தேறியது.

முற்றிலும் கற்களால் ஆன கர்ப்பக்ரஹம், அர்த்த மண்டபம், பெரிய கல் தூண்களுடன் மகாமண்டபம் என சர்வ லட்சணங்களுடன் இக்கோயில் காணப்படுகிறது.

பழங்காலத் தமிழகத்தில் மிகச் சிறப்பாக அமைந்திருந்த ஊராட்சி முறை பற்றி, உத்தரமேரூர் தொல்பொருள் ஆய்வுகளின் மூலம் உலகமே அறிந்ததுதான். ஆயினும், அதுபோன்றே, தமிழக வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் கல்வெட்டுகளை தன்னகத்தே கொண்டுள்ள, புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பழைய சீவரம் வைகுந்தப் பெருமாள் திருக்கோயில், பலர் அறியாதது. பத்தாம் நூற்றாண்டிலே தனி ஆட்சி புரிந்த பார்த்திவேந்திராதிபதி என்னும் அரசனின்



Scanned with CamScanner

கல்வெட்டுகளும், முதல் பராந்தக சோழ அரசனின் கல்வெட்டுகளும் இக்கோயிலில் கிடைக்கப் பெற்றுள்ளன.

இன்றைக்குப் பழைய சீவரம் என்றழைக்கப்படும் இவ்வூர், முற்காலத்தில் இரண்டு பகுதிகளாக விளங்கி இருந்ததை கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். வைகுந்த பெருமாள் கோயில் இருந்த பகுதி விண்ணபுரம் என்றும், லக்ஷ்மீ ந்ருசிம்மன் கோயில் இருந்த பகுதி ஜீயர்புரம்(சீயபுரம்) என்றும் அழைக்கப்பட்டது.

உத்தரமேரூர் ஊர் அவைக்கும் வாரியத்திற்கும் நிகரான ஊராட்சி முறை இவ்வூரிலும் நிலவி ஊரைப் பரிபாலித்து வந்துள்ளது. நம் நாட்டுக்கே முன்மாதிரியாக, தமிழகத்தின் பழங்கால ஆட்சிமுறை அமைந்திருந்தது என்று சொன்னால் மிகையாகாது. தற்போது தேர்தலில் போட்டியிடுபவர்கள் சொத்துக் கணக்குக் காட்டும் வழக்கம், தொன்று தொட்டு தமிழகத்து ஊராட்சித் தேர்தல் முறைகளில் வழக்கில் இருந்து வந்திருக்கிறது என்பது நாமெல்லாம் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்!

ஊர் வாரியம் செய்கின்ற பெருமக்கள், ஊர் வாரியத் தேர்தலுக்கு நிற்பதற்கு முன், தங்கள் சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டும். ஊர் நடுவே கூடும் சிர்குட்டி அம்பலத்திலே, அனைவரின் முன்பும் சத்தியம் செய்து, ஊர் வாரியப் பெரு மக்களாகப் பணி ஏற்கவேண்டும். வாரியம் செய்கின்ற பெருமக்கள், மீண்டும் வாரியத்தில் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாரியப் பணி ஊதியம் தவிர பிற சலுகைகள் மற்றும் தனி ஊதியம் பெறுதல் கூடாது. இவையனைத்தையும் இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

புதர்களில் மண்டிக் கிடந்த இக்கோயில், தற்போது, 3 அடுக்கு ராஜகோபுரத்துடனும், 24 அடி த்வஜஸ்தம்பத்துடனும் மற்றும் பல புதிய சன்னிதிகளுடனும் மிகவும் அழகாக விளங்குகிறது. பெரியதொரு வாகன மண்டபமும் கண்ணாடி அறையும் கூட கட்டப்பட்டு, கோவில் உத்சவங்கள், பெருமாள் புறப்பாடுகள் அனைத்தும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன.



இக்கோயில் பூஜைகள் வைகானச ஆகம விதிப்படி எந்தவித குறைவுமின்றி நடைபெறுகிறது.

பெருமாளும் தாயாரும் வருடந்தோறும் பற்பல உத்சவங்கள் கண்டருளுகிறார்கள். வைகுண்ட ஏகாதசி, தைப்பொங்கல், பங்குனி உத்திரம், பவித்ரோத்சவம், தீபாவளி, கார்த்திகை, ஹனுமத் ஜயந்தி, ஹயக்ரீவ ஜயந்தி போன்ற பல உத்சவங்கள் மட்டுமல்லாது, ஆனி அனுஷத்தன்று இவ்வெம்பெருமானின் அவதார உத்சவமும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

வெள்ளிக்கிழமைதோறும், வைகுண்ட வல்லித் தாயாருக்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது.

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி திருவோணத்தன்று சுவாமி வேதாந்த தேசிகனின் சாற்றுமுறை அதிசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இது மட்டுமல்லாது, மார்கழி மாத ஆராதனமும் நடைபெறுகிறது.

12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டுமொரு முறை சம்ப்ரோக்ஷணம் (8.9.2019) அன்று நடைபெற இருக்கும் இந்த சமயத்தில், பாலாற்றின் கரையில் அருள்பாலிக்கும் வைகுண்டவல்லித் தாயார் சமேத வைகுண்ட நாதப் பெருமாளை சென்று சேவித்து பாக்யம் பெறுவோம்.

**காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவிலும், செங்கல்பட்டிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. காஞ்சியிலிருந்து இவ்வூருக்குப் பல பேருந்து வசதிகளும் உண்டு.**



Scanned with CamScanner